***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 231/2021 – P.W. 6 (LW13)***

| | |
|---|---|
| *Name* | மோகன் ராஜ் உதவி பேராசிரியர்<br>திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *36* |

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 23.02.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 13.05.2019 ம் தேதியன்று மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது மாலை 04.22 மணியளவில் வடுவூர் காவல் நிலைய குற்ற எண்.110/2019 வழக்கில் சம்பந்தப்பட்ட சுமார் 60 வயதுடைய ராஜவேல் என்ற இறந்த ஆண் நபரின் சடலத்தை சடக்கூராய்வு செய்வதற்கான கடிதத்தை நிலைய ஆய்வாளரிடம் இருந்து நிலைய ஆண் காவலர் திரு. பாலமுருகன் என்பவரிடம் இருந்து பெற்றேன். அதற்கிணங்க அன்றையதினம் மாலை 04.25 மணிக்கு பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது. பிரேதமானது மல்லாந்த நிலையிலும் மிதமான போஷாக்குடனும், மிதமான உடல்வாகுடனும் காணப்பட்டது. வெளியில் தெரியக்கூடிய காயங்கள்

1. வலது தோள்பட்டையில் கன்றிய காயம் இருந்தது.

2. முதுகின் மேல்புறத்தில் நிறைய சிராய்ப்பு காயங்கள் இருந்தது.

3. 3X3 cm சிராய்ப்பு காயம் வலது தோள்பட்டையில் இருந்தது.

4, 4X3 cm சிராய்ப்பு காயம் வலது தொடையில் இருந்தது.

5. கீழ் தாடையில் எலும்பு முறிவு இருந்தது.

6. 5X3X cm எலும்பின் ஆழம் வரையிலான கிழிந்த காயம் வலது முன்பக்க தலையில் இருந்தது.

7. 5X3 cm சிராய்ப்பு காயம் வலது கண்ணத்தில் இருந்தது.

மரண விரைப்பு தன்மை இரு கை மற்றும் கால்களில் இருந்தது.

உள்ளாய்வு

1. வலது விலாவில் 2,3,4 வலதுபுற விலா எலும்புகளில் எலும்பு முறிவு இருந்தது.

2. நுரையீரல் , கல்லீரல் , சீறுநீரகங்கள், குடல் இரத்தம் இன்றி இருந்தது.

3. இருதயம், வயிறு காலியாக இருந்தது.

4. மண்டை ஓடு வலது முன்பக்கத்தில் எலும்பு முறிவு இருந்தது

5. முதுகு தண்டு சாதாரணமாக இருந்தது.

6. மூளை சாதாரணமாக இருந்தது.

சடலகூராய்வு மாலை 05.45 மணிக்கு நிறைவுற்றது. பிரேதமானது பொறுப்பு காவலர் திரு. பாலமுருகனிடம் ஒப்படைக்கப்பட்டது. இறப்பானது சடலக்கூராய்வு முன்னர் 06 ல் இருந்து 12 மணி நேரத்திற்குள் நடந்திருக்கலாம்.

இறப்பானது தலை மற்றும் விலா எலும்புகளில் காயத்தினால் ஏற்பட்ட இரத்தபோக்கினால் இறந்திருக்கலாம் என்று கருத்துரை வழங்கினேன். **மேற்படி சடலக்கூராய்வு அறிக்கை அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.